## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். CC. 522 /2018**

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20 ம் தேதி வெள்ளிக் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கோவிந்தன் | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : திருகருக்கான் | சமயம் | : |
| கிராமம் | : அனந்தபுரம் | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 50 |

தேதி 20.10.2023

சாட்சியையும் எதிரியும் அனந்தபுரம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. திரு. E. ஜெயசங்கர் H.C - 1931 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(2 ம் எதிரி ஆஜர். 1 ஆஜர் இல்லை . 1ம் எதிரி தரப்பில் மனுதாக்கல் செய்ய முன் வரவில்லை. )**

**(சாட்சிக்கு 1, 2 எதிரிகளை நேரிட்டு நன்றாக தெரியும் என்று கூறியதன் பேரில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது)**

**முதல் விசாரணை**

**1.** நான் அனந்தபுரம் கீழ் மலை கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 குமார் பக்கத்து ஊர்க்காரர். உறவினர் அல்ல. இவ்வழக்கில் எதிரிகள் இளங்கோவன், ராஜேந்திரனை நன்றாக தெரியும். 7, 8 வருத்திற்கு முன்பாக தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒரு நாள் ராஜேந்திரனும், இளங்கோவனும் காய்கறி வாங்க அனந்தபுரத்தில் உள்ள குமார் காய்கறிகடைக்கு போனார்கள். நானும் அப்போது காய்கறி வாங்க குமார் காய்கறி கடையில் இருந்தேன். அப்போது காய்கறி கடையில் குமாரின் மகள் மீனாட்சி வியாபாரம் செய்திருந்தார். ராஜேந்திரனும் இளங்கோவனும் மேற்படி கடையில் காய்கறி வாங்கினார்கள். வாங்கிய காய்கறிக்கு மீனாட்சி பணம் கேட்டுள்ளார். அதற்கு பணம் அஇல்லை என்று கூறி தெவிடியா என்று ராஜேந்திரனும், இளங்கோவனும் சொன்னார்கள். உடனே மீனாட்சி அவங்க அப்பாவுக்கு போன் பன்னி வரசொன்னார். அத ற்குள்ளாக பக்கத்தில் உள்ள கடைக்காரர்களும் வந்தார்கள். உடனே ராஜேந்திரனும், இளங்கோவனும் சின்னத்தெரு மூலைத் தெருவில் பஸ்டாப்பிற்கு போய்விட்டார்கள். குமார் காய்கறி

கடைக்கு வந்தார். பிறகு யார் என்று தேடினார். பிறகு காய்கறி வாங்கிகொண்டு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். .போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை:**

2. போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் முன்வராததால் சாட்சியின் விசாரணை இத்துடன் முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை**:இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். CC. 522 /2018**

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20ம் தேதி வெள்ளிக் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சந்திரசேகர் | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : ராமசாமி | சமயம் | : |
| கிராமம் | : அனந்தபுரம் | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 55 |

தேதி 20.10.2023

சாட்சியையும் எதிரியும் அனந்தபுரம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. திரு. E. ஜெயசங்கர் H.C - 1931 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(2ம் எதிரி ஆஜர். 1ஆஜர் இல்லை . 1ம் எதிரி தரப்பில் மனுதாக்கல் செய்ய முன் வரவில்லை.)**

**முதல் விசாரணை**

1. நான் அனந்தபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 8 வருடத்திற்கு முன்பாக குமார் காய்கறி கடை அருகே மெயின் ரோடு அருகே நானும், எனது நன்பர் நேருவும் பேசிக்கொண்டியிருந்தோம். அப்போது அனந்தபுரம் போலிசார் காய்கறிகடைக்கு வந்து விசாரணை செய்தார்கள். அப்போது காயக்கறி கடையில் நடந்த சண்டைக்காக வந்திருப்பதாக கூறி சாட்சி கையொப்பம் கேட்டார்கள். அப்போது நான் கையெழுத்து போட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**( 3. 28.05.2015 தேதியிட்ட பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்பட்டது.)**

**குறுக்குவிசாரணை:**

2. போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் முன்வராததால் சாட்சியின் விசாரணை இத்துடன் முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை**:இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.